# News Release

# வுட்பிரிட்ஜ் நூலகம் அதிகாரப்பூர்வமாக மீண்டும் திறக்கப்பட்டது!

**வாகன், ஒன்ராறியோ (செப். 6, 2025)** – அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படுகிறது – அனைவருக்கும் பிடிக்கும் வகையில் பல மேம்பாடுகளுடன் புதுப்பிக்கப்பட்ட வுட்பிரிட்ஜ் நூலகம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது!

150 வுட்பிரிட்ஜ் அவென்யூவில் அமைந்துள்ள நூலகத்தில் இன்று விழா கொண்டாட்டங்கள் நடைபெற்றன, அதில் மேயர் ஸ்டீவன் டெல் டுகா, கவுன்சில் உறுப்பினர்கள் மற்றும் வாகன் பொது நூலக வாரிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் ரிப்பன் வெட்டி திறப்பு விழா நடைபெற்றது. மேலும் மேயர் டெல் டுகாவின் குறிப்புரைகள், இலவச செயல்பாடுகள் மற்றும் பல சுவாரஸ்ய அம்சங்கள் இடம்பெற்றன.

இந்தப் புதுப்பிப்பின் மூலம் நூலகத்தின் பரப்பளவு 730 சதுர அடியாக அதிகரிக்கப்பட்டு, பல மேம்பாடுகள் செய்யப்பட்டுள்ளன, அவை:

- உயர்ந்த மேற்தளங்கள் மற்றும் அதிகச் சாளரங்களுடன் கூடிய விரிவான நுழைவிடம்
- கூடுதல் இருக்கை வசதி
- *ஒன்ராறியோ மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகல் சட்டத்திற்கு* இணங்கும் விதமாகப் பல வசதி மேம்பாடுகள் செய்யப்பட்டுள்ளன, அதில் மேம்படுத்தப்பட்ட எலிவேட்டர் வசதியும் அடங்கும்.
- கீழ்தளத்திலும் குழந்தைகள் பிரிவிலும் கண்ணாடிச் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- புதிய தரைத்தளங்கள்.
- புதிய LED விளக்குகள்.
- புதுப்பிக்கப்பட்ட கழிப்பறைகள்.

இந்த மேம்பாடுகளை நிறைவு செய்வதற்காக, வாகன் நகரம் சுமார் $2.38 மில்லியன் நிதி வழங்கியுள்ளது, மேலும் கனடா அரசாங்கத்திடமிருந்து தென் ஒன்ராறியோவிற்கான கூட்டாட்சி பொருளாதார மேம்பாட்டு அமைப்பு (FedDev Ontario) மூலம் சுமார் $445,000 பெற்றுள்ளது.

இந்த மேம்பாடுகள், அனைத்து வருகையாளர்களும் மகிழ்ச்சியுடன் பயன்படுத்தக்கூடிய வகையில், மேலும் பிரகாசமான, எளிதில் அணுகக்கூடிய மற்றும் வரவேற்கத்தக்க இடத்தை உருவாக்குகின்றன – நீங்கள் புத்தகத்தைக்

கடனாக வாங்கவோ, நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதோ அல்லது புதிய அமர்வு பகுதிகளில் ஓய்வெடுப்பதோ எதற்காக வந்தாலும்.

மேலும் தகவல்களுக்கு, [vaughanpl.info/**wo**](vaughanpl.info/wo)
-ஐ பார்வையிடவும்.

வாகன் பொது நூலகங்கள் என்பது சமூகத்தை மையமாகக் கொண்ட முன்னணி நூலக அமைப்பாகும். இது சமூகத்திற்குக் கல்வி கற்பித்தல், உற்சாகப்படுத்துதல் மற்றும் அதிகாரம் அளித்தல் ஆகியவற்றிற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் மூன்று மில்லியனுக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள், 500,000 வளங்கள், மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் பல்வகை நிரலாக்கத்துடன், நாங்கள் வாழ்நாள் முழுவதும் கற்றல் வாய்ப்புகளை வழங்குகிறோம். உயர் தரம், பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும் சூழல் - இவை மீது எங்களுக்கு இருக்கும் உறுதியான அர்ப்பணிப்பு, அனைவரும் செழிக்கக்கூடிய வரவேற்கக்கூடிய சூழலை உருவாக்குகிறது.

**மேற்கோள்கள்**
“பல புதுப்பிப்புப் பணிகளுக்குப் பின், இன்று வுட்பிரிட்ஜ் நூலகத்தின் அதிகாரப்பூர்வ மறுதிறப்பை நாம் கொண்டாடினோம்! வரலாற்றுச் சிறப்புமிக்க வுட்பிரிட்ஜின் மையத்தில் அமைந்துள்ள இந்தப் புதுப்பிக்கப்பட்ட வசதி, அனைவரின் தேவைகளையும் பூர்த்திச் செய்யும் வகையில் மேலும் பிரகாசமான, எளிதில் அணுகக்கூடிய மற்றும் வரவேற்கத்தக்க இடமாக உருவாக்கப்பட்டுள்ளது. நான் ஒரு மேயராக, தொடர்பு, படைப்பாற்றல், கல்வி மற்றும் பொழுதுபோக்கு ஆகியவற்றுக்கான இடங்களை உருவாக்குவதில் நான் அர்ப்பணிப்புடன் செயல்படுகிறேன், மேலும் இந்த அழகிய நூலகம் பல ஆண்டுகள் அதற்கான இடமாக இருக்கும் என்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த முக்கிய நகர மேம்பாட்டு திட்டத்திற்கான நிதியுதவி வழங்கிய கனடா அரசாங்கத்திற்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது, வுட்பிரிட்ஜ் நூலகம் வழங்கும் அனைத்தையும் வந்து அனுபவிக்குங்கள்!”
- மேயர் ஸ்டீவன் டெல் டுகா

“வுட்பிரிட்ஜ் நூலகம் பல தசாப்தங்களாகச் சமூகத்தின் மையத்தில் இருந்து வருகிறது. இப்போது இம்முக்கியமான புதுப்பிப்புப் பணிகளுக்குப் பின், எங்கள் பயனாளர்களை மீண்டும் வரவேற்கப்போகிறோம் என்பதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். ஓய்வெடுத்து ஒரு புத்தகம் அல்லது செய்தித்தாளை வாசிக்க வருபவர்களுக்கு, அதிகப்படியான சீரான அமர்வு வசதிகளை வழங்கியுள்ளோம். படிக்க வருபவர்களுக்கு, நூலகம் முழுவதும் கூடுதல் இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குடும்பங்கள், விரிவுபடுத்தப்பட்ட

குழந்தைகள் பிரிவை பார்த்து மகிழ்ச்சியடைவார்கள். மேலும், புதியதும், பெரியதுமான எலிவேட்டர் மூலம் குழந்தைகள் வண்டி மற்றும் சக்கர நாற்காலிகளுடன் எங்கள் சேகரிப்புகள், நிரல்கள் மற்றும் சேவைகளுக்கு எளிதான அணுகலை பெற முடியும். இதனை மேலும் சிறப்பாக்குவது, முழுமையாகப் புதுப்பிக்கப்பட்ட நுழைவாயில் ஆகும் – தரை முதல் மேற்தளம் வரை அமைக்கப்பட்ட ஜன்னல்கள், நடந்து செல்லும் மக்களை ஈர்க்கவும், இந்த அக்கம்பக்கப் பகுதியின் அழகை வெளிப்படுத்தவும் உதவுகின்றன. பிரகாசமான, நவீன நிறைவு வேலைகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளதால், இது நீங்கள் நினைத்திருந்த பழைய வுட்பிரிட்ஜ் நூலகமல்ல. இந்த இலையுதிர் பருவத்தில், பழையதும் புதியதும் ஆன பயனாளர்களை எங்கள் வாசல் வழியாக வரவேற்க ஆவலுடன் காத்திருக்கிறோம்."

- மார்ஜி சிங்கிள்டன், தலைமை செயல் அதிகாரி, வாகன் பொது நூலகங்கள்

**முக்கியத் தகவல்கள்**

- வுட்பிரிட்ஜ் நூலகம் செப். 6 அன்று சமூக மக்களின் பயன்பாட்டிற்காக அதிகாரப்பூர்வமாக மீண்டும் திறந்து வைக்கப்பட்டது.
- வாகன் நகரமும் வாகன் பொது நூலகங்களும் இணைந்து, ரிப்பன் வெட்டுதல் நிகழ்ச்சி , மேயர் டெல் டுகா வழங்கிய குறிப்புரைகள், இலவச நிகழ்ச்சிகள் மற்றும் பல சுவாரஸ்ய அம்சங்களுடன் திறப்பு விழாவை கொண்டாடின.
- வுட்பிரிட்ஜ் நூலகம் 150 வுட்பிரிட்ஜ் அவென்யூவில் அமைந்துள்ளது.
- சமீபத்திய புதுப்பிப்புகளில், கூடுதல் அமர்வு வசதிகள், புதிய தரைத்தளம் மற்றும் LED விளக்குகள், மேம்படுத்தப்பட்ட கழிப்பறைகள் மற்றும் பல அடங்கும்.

**மேலும் அறிய**

- வுட்பிரிட்ஜ் நூலக வலைப்பக்கம்
- வாகன் பொது நூலகங்கள் வலைப்பக்கம்

-30-

**வாகனைப் பற்றி:** வாகன் நகரம் கனடாவின் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும், இதன் மக்கள் தொகை 344,412 ஆக உள்ளது. 1991-இல் இணைக்கப்பட்ட வாகன், கான்கார்ட், க்ளீன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில் மற்றும் வுட்பிரிட்ஜ் சமூகங்களை உள்ளடக்கியது. இந்தக் கலாச்சார ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்ட நகராட்சி, யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொராண்டோ பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

# News Release

**ஊடக தொடர்புக்கு:** வாகன் நகரம்
தொடர்புகள், சந்தைப்படுத்தல் மற்றும் ஈடுபாட்டுத் துறை
905-832-2281 | corpcomm@vaughan.ca